**பிப்ரவரி – 18**

# TNPSC துளிகள்

- புதுச்சேரியானது “Zero Covid by Feb28” (பிப்ரவரி 28க்குள் சுழிய கோவிட்) என்ற பெயரில் ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
    - இது அந்த ஒன்றியப் பிரதேசத்தில் 2021 ஆம் ஆண்டின் பிப்ரவரி இறுதிக்குள் கோவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் யாரும் இல்லாதவாறு உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேக்னா பந்த் அவர்கள் “The Terrible, Horrible, Very Bad Good News" என்ற ஒரு புதிய புத்தகத்தை எழுதியுள்ளார்.
- உத்தரப் பிரதேசத்தின் பஹ்ரைச்சில், மகாராஜா சுஹெல்தேவ் நினைவிடத்திற்கு பிரதமர் அவர்கள் இணைய வழியில் அடிக்கல் நாட்டினார்.
- சர்வதேச சூரிய மின்சக்தி உற்பத்திக் கூட்டமைப்பானது டாக்டர் அஜய் மாத்தூரை அதன் புதிய தலைமை இயக்குநராக அறிவித்துள்ளது.
- நீதிபதி புலிகோரு வெங்கட சஞ்சய் குமார் அவர்கள் மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பதவியேற்று உள்ளார்.
- மரப் பொம்மைகள், உள்ளூர் கலைப்பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் ஆகியவற்றை ஊக்குவிக்க மகாராஷ்டிர மாநில அரசானது பிளிஃப்கார்ட் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- முன்னாள் ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவர் மரியோ டிராகி அவர்கள் இத்தாலியின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## மகாத்மா காந்தி தேசிய தோழமைத் திட்டம்

- திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகமானது சமீபத்தில் இந்தியாவின் அனைத்து மாவட்டங்களிலும் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.
- இந்தத் திட்டம் முன்னதாக 69 மாவட்டங்களில் செயல்பட்டு வந்தது.
- இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள உறுப்பினர்கள் கல்வி நிபுணத்துவம் மற்றும் தொழில் நுட்பத் திறன் ஆகியவற்றைப் பெறுவார்கள்.
- இது இரண்டு ஆண்டு கால அளவிலான திறன் பெறும் திட்டமாகும்.
- இதில் இணைவோர் 21 முதல் 30 வரையிலான வயதிற்குள் இருக்க வேண்டும்.
- இது சங்கல்ப் என்ற திட்டத்தின் கீழ் வடிவமைக்கப் பட்டுள்ளது.

## ராஷ்டிரிய சமஸ்கிருத மஹோத்ஸவ்

- மேற்கு வங்கத்தில் 11வது ராஷ்டிரிய சமஸ்கிருத மஹோத்ஸவ் துவக்கி வைக்கப் பட்டது.
- இது மத்தியக் கலாச்சார அமைச்சகத்தின் ஒரு முதன்மைத் திட்டமாகும்.
- இது “ஏக் பாரத் ஸ்ரேஷ்தா பாரத்” என்ற திட்டத்தின் கீழ், 2015 ஆம் ஆண்டு முதல்

ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது.

- இது வேற்றுமையில் ஒற்றுமை என்ற கருத்தைக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வணிக சணல் விதை விநியோகத் திட்டம்

- மத்திய ஜவுளித் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி அவர்கள் வணிக சணல் விதை விநியோகத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்திய சணல் நிறுவனம் மற்றும் தேசிய விதைக் கழகம் ஆகியவற்றுக்கிடையே கையெழுத்திடப் பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னணியில் இது தொடங்கப் பட்டது.
- 2021-22 ஆம் ஆண்டில் 1 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிலான சான்றளிக்கப்பட்ட சணல் விதைகளை வணிக ரீதியாக விநியோகிக்க இந்த 2020 ஆம் ஆண்டின் புரிந்துணர்வு ஒப்பந்தம் கோருகிறது.
- இந்தியாவில் தங்க இழைப் புரட்சி சணல் உற்பத்தியுடன் தொடர்புடையது.

## இ-சவானி தளம்

- இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் இ-சவானி தளத்தை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- இதைப் பயன்படுத்தி, கன்டோன்மென்ட் பகுதிகளில் வசிப்பவர்கள் குடிமைப் பிரச்சினைகள் தொடர்பாக தங்கள் புகார்களைப் பதிவு செய்யலாம்.
- கன்டோன்மென்ட் வாரியமானது ஒரு குடிமை நிர்வாக அமைப்பாகும்.
- இது இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- கன்டோன்மென்ட் சட்டம் - 2006 என்ற சட்டத்தின் படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அலுவல் ரீதியான உறுப்பினர்கள் மற்றும் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரால் இந்த வாரியமானது அமைக்கப் பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## புதிய START அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம்

- ரஷ்யாவுடனான "புதிய ஸ்டார்ட்" என்ற அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தை அமெரிக்கா ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.
- புதிய மூலோபாய ஆயுதக் குறைப்பு ஒப்பந்தமானது (New STrategic Arms Reduction Treaty) 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 8, அன்று முறையாக கையெழுத்தானது.
- ஒப்புதலுக்குப் பிறகு, இது 2011 ஆம் ஆண்டின் பிப்ரவரி 5 அன்று நடைமுறைக்கு வந்தது.
- புதிய START ஒப்பந்தமானது 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 5, அன்று காலாவதியாக இருந்தது.
- ஆனால் இரு தரப்புகளும் இதை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை நீட்டித்துள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## 8 உறுப்பினர்கள் நிபுணர் குழு

- ❖ முதன்மை (நகர்ப்புற) கூட்டுறவு வங்கிகள் குறித்து எட்டு பேர் கொண்ட நிபுணர் ஒரு குழுவை இந்திய ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது.
- ❖ இது சிக்கல்களை ஆராய்வதையும், அத்துறையை வலுப்படுத்துவதற்கான ஒரு திட்டத்தைப் பரிந்துரைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இக்குழுவிற்கு ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் என்.எஸ். விஸ்வநாதன் தலைமை தாங்குவார்.


## பெருநிறுவன இந்தியா இடர்க் குறியீடு

- ❖ ஐசிஜசிஜ லோம்பார்ட் நிறுவனமானது 'பெருநிறுவன இந்தியா இடர்க் குறியீட்டை' அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ இது தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களை உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்த, தரப்படுத்தப்பட்ட பெருநிறுவன இடர்க் குறியீடாக இருக்க முனைகிறது.
- ❖ இது நிறுவனங்கள் தங்கள் வணிகத்தை எதிர்கொள்ளும் இடர்களின் அளவைப் புரிந்து கொள்ள உதவும்.
- ❖ வெற்றிகரமான இடர் விலக்குத் திட்டத்தை உருவாக்கவும் இது உதவும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## 'டிக்கின்சோனியா' விலங்கின் புதைபடிவங்கள்

- ❖ 550 மில்லியன் ஆண்டுகள் பழமையான 'டிக்கின்சோனியா' என்ற பழங்காலத்தில் வாழ்ந்த விலங்கின் மூன்று புதைபடிவங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.
- ❖ இது போபாலுக்கு அருகிலுள்ள பீம்பேட்கா பாறை வாழிடத்தில் கண்டுபிடிக்கப் பட்டது.
- ❖ இதில் ஒரு புதைபடிவம் 17 அங்குல நீளம் கொண்டது, மற்ற இரண்டு மிகவும் சிறியவை ஆகும்.



# மாநிலச் செய்திகள்

## ராஜஸ்தான் சிறை விதிகள் - 1951

- ராஜஸ்தான் அரசானது 1951 ஆம் ஆண்டின் ராஜஸ்தான் சிறை விதிகளைத் திருத்தியது.
- இந்த நடவடிக்கையானது சாதி அடிப்படையில் வேலை ஒதுக்குவதை நீக்குதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முன்னதாக, சிறைக்குள் நுழையும் ஒவ்வொரு நபரிடமும் அவரது சாதி குறித்து கேட்கப் பட்டன.
- அவர்களின் சாதி அடையாளம் காணப்பட்டவுடன் கழிப்பறைகளைச் சுத்தம் செய்தல், சிறைச்சாலையைத் துடைப்பது போன்ற மோசமான வேலைகள் அவர்களுக்கு ஒதுக்கப் பட்டன.

## 'ஒரே தேசம் ஒரே குடும்ப அட்டை முறை' சீர்திருத்தம்

- "ஒரே தேசம் ஒரே குடும்ப அட்டை முறை" என்ற சீர்திருத்தத்தை வெற்றிகரமாக மேற்கொண்ட 13வது மாநிலமாக பஞ்சாப் மாறியுள்ளது.
- இதனால், திறந்தநிலைச் சந்தைக் கடன் மூலம் ரூ.1,516 கோடி கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்ட அந்த மாநில அரசு தகுதி பெற்றுள்ளது.
- இதற்கான அனுமதியானது மத்தியச் செலவினங்கள் துறையால் வழங்கப்பட்டது.

| Sl.No. | State | Amount (Rs in crore) |
|---|---|---|
| 1. | Andhra Pradesh | 2,525 |
| 2. | Goa | 223 |
| 3. | Gujarat | 4,352 |
| 4. | Haryana | 2,146 |
| 5. | Karnataka | 4,509 |
| 6. | Kerala | 2,261 |
| 7. | Madhya Pradesh | 2,373 |
| 8. | Punjab | 1,516 |
| 9. | Rajasthan | 2,731 |
| 10. | Tamil Nadu | 4,813 |
| 11. | Telangana | 2,508 |
| 12. | Tripura | 148 |
| 13. | Uttar Pradesh | 4,851 |

## சிறிய அருங்காட்சியகங்கள்

- சிறிய அருங்காட்சியகங்களை மாநிலத்தில் நிறுவி ஊக்குவிக்கும் முயற்சியை கேரள அரசு தொடங்கியுள்ளது.
- இந்தப் புதிய அருங்காட்சியக இயக்கமானது கேரளம் அருங்காட்சியகம் என்ற அமைப்பால் தொடங்கப் பட்டுள்ளது.
- இது அருங்காட்சியகங்களை உருவாக்கி நவீனமயமாக்கும் ஓர் அமைப்பாகும்.
- கொச்சி கோட்டை பகுதியில் உள்ள பாஸ்டன் மாளிகையானது எர்ணாகுளம்

மாவட்டப் பாரம்பரிய அருங்காட்சியகமாக செயல்படும் என்றும் அம்மாநில அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

### மண்டு விழா

- மத்தியப் பிரதேசத்தின் தார் மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமான மண்டுவில் “மண்டு விழா” தொடங்கியது.
- பண்டைய மண்டு நகரத்தின் ஒவ்வோர் அம்சத்தையும் காட்சிப்படுத்தும் வகையில் இந்த விழா உள்ளது.
- இந்த விழாவின் போது, மண்டுவில் புதிதாக கட்டப்பட்ட டைனோ சாகசப் பூங்கா மற்றும் புதைபடிவ அருங்காட்சியகம் ஆகியவை திறந்து வைக்கப்பட்டன.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### சரணாலய வாழ்நாள் சேவை விருது – 2020



- இயற்கையியலாளரும் ஆர்வலருமான எஸ். தியோடர் பாஸ்கரன் அவர்கள் 2020 ஆம் ஆண்டிற்கான சரணாலய வாழ்நாள் சேவை விருதை வென்றுள்ளார்.
- இந்த விருது சரணாலயம் இயற்கை அறக்கட்டளை (Sanctuary Nature Foundation) என்ற அமைப்பால் நிறுவப் பட்டது.
- வனவிலங்குப் பாதுகாப்புக்கான அர்ப்பணிப்பின் காரணமாக அவர் இந்த விருதுக்குத் தேர்வு செய்யப் பட்டார்.

- முன்னதாக தமிழில் இயற்கையைப் பற்றி எழுதியதற்காக அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது (இயல் விருது) வழங்கப் பட்டது.
- டொராண்டோவில் 2014 ஆம் ஆண்டில் கனடா இலக்கியத் தோட்டத்தால் இந்த விருது அவருக்கு வழங்கப் பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★